சாப்பாட்டுக்குப் போகிறேன் அங்கு போகிறேன், இங்கு போகிறேன் என்று காரணம் காட்டி சொல்லி, விட்டு விட்டுப் போகக் கூடாது என்ற ஒரு விதி பிறப்பிக்கப்படுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதுதான் இன்றைக்கு இருக்கிற சட்ட நிலைமை. அதை அவர்கள் சரியாக செய்வதில்லை என்பதுதான் இப்பொழுது 'கம்ப்ளேண்டு'.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்பொழுது, இத்தனை கேஸ் போடவேண்டும் என்று கண்டிப்பாக நிபந்தனை இல்லை என்று சொன்னார்கள். ஆனால், ஒவ்வொரு வாரத்திலும் ஹெட் கான்ஸ்டேபிள்கள் இன்ஸ்பெக்டரிடம் இவ்வளவு கேஸ்கள் பிடித்தோம் என்று விக்லி ரிப்போர்ட்டு கொடுக்க வேண்டும். அப்படியில்லையென்றால், அவர்கள் மீது சார்ஜ் கொடுக்கப்பட்டு பனிஷ்மெண்டு கொடுக்கப்படுகிறது. அம்மாதிரி புகார்கள் வந்து, அதன் மீது அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறார்களா ?

கனம் சபாநாயகர் : புகார் வந்தால்தானே விசாரிப்பதற்கு

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : எந்த அதிகாரியும் தன்னுடைய மேலதிகாரியிடம் இந்த வாரத்தில் என்ன வேலை செய்தோம் என்று ரிப்போர்ட்டு கொடுப்பார்கள். ஆனால் மேல் அதிகாரிகள் இத்தனை கேஸ்கள் பிடிக்க வேண்டுமென்று சொல்லுவதில்லை. அப்படி கேஸ்கள் பிடிக்காததற்கு அவர்கள் பேரில் 'ஆக்ஷன்' எடுப்பதுமில்லை.

Traffic Signal Lights

* 503 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal before the Government to install pedestrian operated signal lights in the State for regulating traffic; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) At present one pedestrian actuated signal has been installed in Madras City on Poonamalli High Road near the Kilpauk Hospital. After studying its working, the system will be extended to other places in the city and the district towns, if necessary.

தமிழ்நாடு வீட்டுவசதிக் கழகம்

** 504 கேள்வி.—***திரு. எம். எஸ். மணி :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை, மதுரை, கோவை, சேலம், திருச்சி முதலிய நகரங்களின் எல்லைக்குள் தமிழ்நாடு வீட்டு வசதிக் கழகம் வாடகைக்கு விடும் பொருட்டு இதுவரை கட்டிய வீடுகளின் எண்ணிக்கை எவ்வளவு ?

12th November 1965]

(இ) அவைகள் என்ன வாடகைக்கு விடப்பட்டுள்ளன ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) The number of such houses is 3,106.

(*b*) A statement [a] is placed on the Table of House.

திரு. எம். எஸ். மணி : *இப்படிக் கட்டிய விடுகளை யாருக்கு வாடகைக்கு விடுகிறார்கள், எந்த அடிப்படையில் கொடுக்கப் படுகிறது என்று தெரிவிக்க முடியுமா ?*

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : *அதுதான் ஸ்டேட்மென்டில் கொடுத்திருக்கிறது. சில வீடுகள் கவர்ன்மெண்ட் ஸர்வென்டுகளுக்கும், சில வீடுகள் பொதுமக்களுக்கும், இன்னும் சில வீடுகள் ஸ்லம் ட்வெல்லர்களுக்கும் கொடுக்கப்படுகிறது. அதெல்லாம் ஸ்டேட்மென்டில் தனித் தனியாகக் கொடுக்கப் பட்டிருக்கிறது.*

திரு. எம். எஸ். மணி : *அந்த வீட்டில் குடியிருக்கிறவர்களுக்கு என்ன யோக்யதாம்சங்கள் இருக்க வேண்டும் என்று தெரிவிக்க முடியுமா ?*

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : *அதற்கு ஒரு கமிட்டி இருக்கிறது. சேரியிலிருந்து வேறு இடத்திற்கு அனுப்ப வேண்டும் என்று திட்டம் போட்ட பிறகு, சேரியிலிருந்து வருகிறவர்களுக்கு இந்த இடம் கொடுக்கப்படும் என்று செய்யப் படுகிறது. அதேபோல, சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கும், கமிட்டி பார்த்து தேர்ந்தெடுத்து கொடுக்கப்படுகிறது.*

மின்சார வசதி

* 505 கேள்வி.—திரு. எஸ். மணி : *கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—*

(அ) திருச்சி மாவட்டம், பெரம்பலூர் வட்டத்தில் வெங்கலம் தொகுதியில் எத்தனை கிராமங்களுக்கு மின்சார வசதியளிக்கப் பட்டுள்ளது ?

(இ) இன்னும் மின்சார வசதியளிக்கப்பட வேண்டிய கிராமங்கள் எத்தனை ?

(உ) 1964–65-ம் ஆண்டில் எத்தனை கிராமங்களுக்கு மின்சார விஸ்தரிப்பு செய்ய சர்க்கார் திட்டமிட்டிருக்கிறது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : *(அ) 23.*

(இ) 67.

(உ) 8.

திரு. எஸ். மணி : *தலைவர் அவர்களே, எங்களுடைய வட்டாரத்தில் மின்சாரம் பயன்படவில்லை. ஒரு ஆண்டு காலமாக மின்சார வேலையை நிறுத்தி வைத்திருக்கிறார்கள். இன்றைக்கு*

---

a Printed as Appendix on pages 982–987.